**கவனிக்க.**- *2011.07.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1718 - 2011 අගෝස්තු මස 05 වැනි සිකුරාදා - 2011.08.05

*1718 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 988 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 990 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, புரட்டாதி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆடி 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குரண | உடகம்பஹா இல. 01 பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஹரிஸ்பத்துவ பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | பாதஹேவாஹெற்ற | கம்பாகய தெற்கு இல. 02 பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பாதஹேவாகெற்ற பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | உடுநுவர | ஹியரப்பிற்றிய பகுதியில் உடுநுவர யட்டிநுவர பிரிவில் மேலதிக விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | டேல்தோட்ட | டேல்தோட்ட பாதஹேவாகெற்ற பிரிவில் மேலதிக பாதஹேவா கெற்ற விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

8-127

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, புரட்டாதி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆடி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | மில்லனிய | பல்பெல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ரைகம் கோறளய பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

8-18

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2010 (II)

2004.12.24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 5.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011, நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/நகரங்கள் பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**4. தகைமைகள்.**- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2011, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**6. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

**7. விண்ணப்பங்கள்.**- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பி வைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன்

பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திற்கும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப் பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்களின் கையொப்பங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய பிரதி பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்பிற்கு புறம்பாக எனில் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட தங்களது கோரிக்கை கடிதத்தை வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

10. அலுவலர்கள் தாம் தொடர்புடைய சேவையில் சேர்வதற்கு உரிய பரீட்சைக்கு தோற்றிய மொழிமூலம் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் 5:2 பந்தியைப் பார்க்கவும்.)

12. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| | மொத்தம் : | | | 200 |

14.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

14.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

15. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2011, யுலை 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2010 (II) 2011**

Efficiency Bar Examination for Officers in Class II of Public Management Assistants' Service – 2010 (II) 2011

(இப்பரீட்சை அறிவிப்பின்படி இணைந்த சேவைகளில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்று வதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

நீங்கள் பரீட்சைக்குத்
தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :—————.
உதா : SILVA, M. A.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : —————.
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :—————.
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :—————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :—————.
2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :—————.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :—————.

3. பால் :-
பெண் – 1, ஆண் – 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் இம்முறை தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :—————.
6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :—————.
6.3 அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் பெற்ற திகதி :—————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? : —————.
7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :—————.
7.3 பற்றுச்சீட்டை ஒட்டுவதற்காக :—————.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். ரூபா ................................... பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை ................................... தபால் அலுவலகத்தில் ............................. ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இத்துடன் ஒட்டியுள்ளேன் என நான் உறுதி மொழிகிறேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சை சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

—————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :—————.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில்

தெரிந்தவர் என்றும் ................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப் பட்டதென்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,

(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,

(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பத னால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

8-120

---

## ஆயுர்வேதத் திணைக்களம்

ஆயுர்வேத தாதிப் பயிற்சியாளர் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல் – 2011

ஆயுர்வேத தாதிப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதற்காக கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வித் தகைமைகள் :**

(அ) பழைய பாடத்திட்டத்திற்கமைய க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் விஞ்ஞானத் துறையில் 4 பாடங்களும் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்திற்கமைய க. பொ. த. (உ. த.) விஞ்ஞானத்துறையில் 3 பாடங்களும் சித்தியடைந்திருத்தலும்.

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு அதிகரிக்காமல் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 4 சிறப்புச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கல்வித் தகைமைகளை உறுதி செய்யும் முகமாக மேல் குறிப்பிடப்பட்ட இரு பரீட்சைகளினதும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப் படல் வேண்டும்.

**2. மற்றைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் ;

(ஆ) 2011.01.01 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) உயரம் 4 அடி 10" அங்குலத்திற்கு குறையாதவராய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும் ;

(உ) பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களின் பிள்ளைகளாக இருப்பின் விண்ணப்பப்படிவங்களை முன்வைக்கும்போது விண்ணப்பதாரியின் தாய்/தந்தை பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக ஆயுர்வேத வைத்திய சபையின் சான்றிதழும் கிராமசேவகரின் சான்றிதழும் முன்வைத்தல் வேண்டும்.

**3. விண்ணப்பிக்கும் முறை.**– (அ) இவ் அறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியை 13" x 8" அளவு தாளின் இரண்டு பக்கங்களும் பாவித்து விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தபால் உறையிலிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத தாதிப் பயிற்சியாளர் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்த்தல் - 2011" என்று குறிப்பிட்டு 'பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம' என்ற முகவரிக்கு 2011.08.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, தபாலில் காலதாமதமாகும் மற்றும் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக எதுவித பொறுப்பும் கூறப்படமாட்டாது.

இலங்கை நிர்வாகச் சேவை/கல்விச் சேவை/அரசாங்க கணக்காளர் சேவை உத்தியோகத்தர்/அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்தம் 2,40,360 ரூபாவுக்குக் குறையாத அடிப்படைச் சம்பளத்தையுடைய அரச உத்தியோகத்தர் அல்லது அவ்வாறான பதவி வகித்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரால் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**4. தேர்ந்தெடுக்கும் முறையும் பயிற்சி முறையும்.**– (அ) விண்ணப்ப தாரிகளில் இருந்து தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் முகமாக ஆயுர்வேதத் திணைக்களத்தினால் திறந்த போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படுவதுடன், அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். போட்டிப்

பரீட்சையில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய தயாரித்த ஒரு மணித்தியால வினாத்தாள் ஒன்றிற்கு சகல விண்ணப்பதாரிகளும் முகங்கொடுக்க வேண்டும் :-

பாடத்திட்டம் :

நுண்ணறிவு
பொது அறிவு
விடய அறிவு

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதுடன் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளுக்கும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளுக்கும் அமைய விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் புள்ளித்திட்டத்திற்கமைய புள்ளிகள் வழங்கப்படும் :-

(1) துறைசார்ந்த அறிவும் அனுபவமும் ;
(2) பாரம்பரிய வைத்தியர் ஒருவரின் பிள்ளையாயின் 30 புள்ளிகள் வரை வழங்கப்படும் ;
(3) ஆளுமை.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆயுர்வேதத் தாதிப் பயிற்சியாளராக ஆயுர்வேதத் திணைக்களத்தினால் சிங்களம்/ தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும் 3 வருட பயிற்சிநெறியை பின்பற்ற வேண்டும்.

(இ) பயிற்சிநெறிக்கு உள்வாங்கும் சந்தர்ப்பத்தில் தொண்டர் தாதிகளுக்கு ஆயுர்வேதத் திணைக்களத்தில் நடைமுறையிலுள்ள சட்டதிட்ட ஒழுங்கொன்று வழங்கப்படும். அச்சட்டதிட்டங்களுக்கும் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தும் சட்டதிட்டங்களுக்கும் அவர்கள் கீழ்ப்படிய வேண்டும்.

(ஈ) பயிற்சிபெறும் காலகட்டத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அல்லது பயிற்சி மற்றும் நடத்தை விரும்பத்தகாததாக அல்லது பரீட்சை மற்றும் விருப்பு தொடர்பான சட்டதிட்டங்களைப் பின்பற்றத் தவறும் தொண்டர் பயிற்சியாளர்களின் பயிற்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நஷ்டஈடு எதுவும் வழங்காது நிறுத்த முடியும். பயிற்சியின்போது தொண்டர் பயிற்சியாளர்கள் எதுவித விடுப்புக்கும் உரிமை கூற முடியாததுடன் பயிற்சிக்காலத்தில் பயிற்சிக்கு சமுகம் தராத நாட்களுக்கான சராசரிக் கொடுப்பனவுத் தொகை குறைக்கப்படும். எவ்வாறாயினும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒவ்வொரு வருடமும் 80% வரவு கட்டாயமானது.

(உ) ஆயுர்வேதத் திணைக்களத்தில் பயிற்சிபெறும் காலத்தில் தொண்டர் பயிற்சியாளர்களுக்குக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய கொடுப்பனவுகள் வழங்கப்படும் :-

(1) முதல் வருடம் மாதாந்தம் 12,920 ரூபா ;
(2) இரண்டாம் வருடம் மாதாந்தம் 13,040 ரூபா ;
(3) மூன்றாம் வருடம் மாதாந்தம் 13,160 ரூபா.

**5. விவாகம் செய்யாதிருப்பதற்கான நிபந்தனைகளும் உடன் படிக்கைகளும் :**

(அ) அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப்படிவம் அனுப்பும் இறுதித் தினத்திற்கு விவாகமாகாதவராய் இருத்தல் வேண்டும். அத்துடன் பயிற்சிபெறும் 3 வருடத்துள் விவாகம் செய்யாதிருத்தல் கட்டாயமானதாகும். விவாகமாகவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு. பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஆ) தாதிப்பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு உள்வாங்கும்போது பயிற்சியை திறம்பட நிறைவுசெய்வதாகவும், அப்பயிற்சி நிறைவு செய்ததன்பின் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வரை ஆயுர்வேத திணைக்களத்தில் சேவை செய்வதாயும், ஆயுர்வேத ஆணையாளருடன் உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்ளல் வேண்டும். ஆயுர்வேத ஆணையாளரினால் இக்காலவரையறை காலத்திற்குக் காலம் உறுதிப்படுத்தப் படும்.

**6. சேவையில் இணைத்துக்கொள்ளும் முறை :**

(அ) மேற்குறிப்பிட்டவாறு பயிற்சியின் பின் இறுதிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் III ஆம் தர தாதிப் பதவிக்கு சம்பளத் திட்டத்திற்கு அமைய பதவி வெற்றிடங்கள் ஏற்படுவதற்கேற்ப ஆயுர்வேத ஆணையாளரினால் நியமனம் வழங்கப்படும்.

(ஆ) தாதிப்பதவிக்கு நியமனம் வழங்கும்போது 3 வருட நன்நடத்தைக் காலத்திற்கு உட்படுவதோடு இது ஓய்வூதிய முடைய பதவியாகும்.

**7. சேவை உடன்படிக்கைகளும் சம்பளத் திட்டமும் :**

(அ) அரச சேவை சுற்றுநிருபம் 06/2006 எம்டீ-7-2006 அமைய 15,080-5X150-9X240-7X240-20X320-26,420 ரூபா சம்பளத் திட்டத்திற்கமைய தாதி உத்தியோகத்தர் III ஆந் தர பதவிகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) தாதிச் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கமைய ஆயுர்வேத தாதிச்சேவை யாப்புச் சட்டதிட்டங்களுக்கும், ஆயுர்வேத திணைக்களத்தினால் முன்வைக்கப்படும் கொள்கைகளுக்கமைய மேற்கொள்ளப் படும் இடமாற்றங்களுக்கும், மூலதனமும் பிற சட்டதிட்டங் களுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது நிறைவேற்றப் படும் சட்டதிட்டங்களுக்கும் உத்தரவுகளுக்கும் உட்படுவார்கள்.

பி. எஸ். கே. ஆர். வீரகோன்,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதிப்பயிற்சியாளர் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல்**

சுட்டெண் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம்-S, தமிழ்-T
(பொருத்தமான எழுத்தை கூட்டினுள் மட்டும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்) :----.

2. முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) :----.

மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

4. பிறந்த திகதி :
ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.

5. (i) பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டினுள்ல் ( ✓ ) எனும் அடையாளமிடுக.)

(ii) திருமணமான/திருமணமாகாத தன்மை :

| | |
|---|---|
| திருமணமான | |
| திருமணமாகாத | |

பொருத்தமான கூட்டில் ( ✓ ) இடவும்.

6. நீங்கள் இலங்கைப் பிரஜையா என்பது தொடர்பாக,

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

பொருத்தமான கூட்டில் ( ✓ ) இடவும்.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. உயரம் :

அடி ----- அங்குலம் -----.

9. (அ) கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை (விஞ்ஞானத் துறை) :----.
வருடம் :----.
சுட்டெண் :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
முதல் தடவை-

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :

(ii) சுட்டெண் :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

இரண்டாவது தடவை-

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :
(ii) சுட்டெண் :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

10. நீதிமன்றம் ஒன்றின் முன் எதுவித குற்றத்திற்காகவாவது குற்ற வாளி என நிரூபிக்கப்பட்டுள்ளீரா ? :

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனின் விபரத்தை இங்கே குறிப்பிடவும் :----.

11. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட சகல விபரங் களும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் பிழையற்றதும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின் றேன்.

(ஆ) என்னைச் சேவைக்கு இணைத்துக்கொள்வதன் முன் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள விபரங்கள் அசத்தியமா னவை எனத் தெரியவரும் பட்சத்தில் நான் சேவையில்

இணைவதற்கு தகுதியற்றவராவதோடு சேவையில் இணைந்த தன் பின் தெரியவரின் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*12.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதோடு அவர், 2011 ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை) :

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-61

---

## இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சையும் -2011 (II)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை என்பன அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கண்காணிப்பு, வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரால் 2011, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி தொடக்கம் 2011, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே அமர்வில் தோற்றக்கூடியவாறு நேரசூசி தயாரிக்கப்படும்.

3. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் மற்றும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | A |
| 2 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | B |
| 3 | இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | C |
| 4 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | D |
| 5 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | E |
| 6 | இரண்டாவது மொழிப் பரீட்சை (சகல சேவைகளுக்கும்) | F |

4. அலுவலர் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கு வெவ்வேறாகவும் வெவ்வேறான அமர்வுகளிலும் தோற்றலாம். ஆயினும் விதித்துள்ள காலப்பகுதியில் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் அத்தியாவசியமாகும்.

5. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். குறித்த மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2011, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர்

கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், இல. 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **விண்ணப்பப்படிவங்கள்**.- இலக்கம் 1.0 தொடக்கம் 5.0 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவிலான ஒரு கடதாசியில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். அவ்விண்ணப்பப் படிவத்தைத் தட்டச்சிலிட்டு தயாரிக்க முடியுமாயினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும். இத்துடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதிகள் அனுப்புதலாகாது என அறியத்தரப்படுகிறது.

7.1 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரியாலேயே அவதானிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7.2 பரீட்சைக் கட்டணம்.- முதலாவதாக பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டிய தில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளில் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு மேலதிகமான எண்ணிக்கைக்கு தோற்றுவார்களாயின் ரூபா 115 உம் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 75 உம் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். "அப்பணத்தை இலங்கை வங்கி சுதந்திர சதுக்க கிளையில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரின் பெயரில் உள்ள கணக்கு இலக்கம் 02323276" இற்கு வரவுவைத்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தப் பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல அலுவலர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் நேரசூசியின் பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்குவார். பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதென்பது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளும் சாதனமாக கொள்ளுதலாகாது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்கள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டைகளின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைத்தவுடன் அதுபற்றிக் குறிப்பிட்டு செய்தித்தாளில் அறிவித்தலொன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்றபின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு மற்றும் கொழும்பிற்கு வெளியிடமாயின் அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்கள் கோரிக்கைக் கடிதம் என்பவற்றை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் சமர்ப்பித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகள் பின்னராக மேற்கொள்கின்ற உசாவுதல்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவரால் கடமை லீவு வழங்குதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(II) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி யொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் ஏதேனுமொரு பரீட்சார்த்தி தமக்கு உரித்தல்லாத மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பின்னர் வெளிவருமாயின் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்.**- ஒவ்வொரு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள வாறாகும்.

13.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு அத்தியாயம் "இ") :

இப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01 |
| 2 | இலங்கையில் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 02 |
| 3 | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |
| 5 | பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 05 |
| 6 | சமூகவியல் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 7 | ஆங்கிலம் | 3 மணித்தியாலங்கள் | 07 |

13.1.1 அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி அடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் அமைவும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும்
(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, அமைச்சரவை, பிரதம மந்திரி மற்றும் மத்திய அரசின் திணைக்களங்களும் அரச சேவையும்
(iii) நீதி நிர்வாகம்
(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதிமன்ற நிர்வாகம்
(v) அரச கொள்கைகளுக்கான வழிகாட்டி கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்
(vi) கையளியதிகார வழிச்சட்டம்
(vii) அரசினதும் அரச அதிகார சபைகளதும் பொறுப்புக்கள்
(viii) அடிப்படை உரிமைகள்

13.1.2 இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 02) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) இலங்கையின் சட்ட வரலாறு
(ii) நீதிமன்ற அமைப்பு
(iii) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 6)
(iv) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

13.1.3 குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 03) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவர் மேற்படி 13.1.1, 13.1.2 மற்றும் 13.1.3 இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 35 வீதப் புள்ளிகளையும் மூன்று பாடங்களின் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40 வீதத்தையும் பெறுதல் வேண்டும்.

13.1.4 நிர்வாகம் (பாட இலக்கம் 04).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) அலுவலகங்கள், வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள்.
(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாங்கள்
I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.5 பொருளியல் (பாட இலக்கம் 05)/சமூகவியல் (பாட இலக்கம் 06) - பரீட்சார்த்திகள் பொருளியல் அல்லது சமூகவியல் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுதல் வேண்டும்.

13.1.5.1 பொருளியல் (பாட இலக்கம் 05) - கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) பெறுமானம், உற்பத்தி விநியோகத்தின் கொள்கைகளின்பால் விசேட கவனத்துடன் பொருளியல் கோட்பாடுகள்
(ii) நிதி, நிதி அலுவல்களும் நிதிக் கோட்பாடுகளும்
(iii) இலங்கை பொருளாதார அமைவு

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.5.2 சமூகவியல் (பாட இலக்கம் 06) - இலங்கை பற்றிய முக்கிய கவனத்துடன் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) சமூக அமைவும், அமைப்பாண்மையும் பணிகளும்
(ii) மானிட உறவுகளும், குழுக்களும்
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம்
(iv) கிராமிய நகர்ப்புறச் சமூகம்
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
(vi) சமூக கட்டுப்பாடு
(vii) கலாசாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் பெறுமதிகள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.1.6 ஆங்கிலம் (பாட இலக்கம் 07) - இப்பாடத்திற்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

*(i) **Listening & Speaking Skills***
The candidate should possess the ability to function effectively in the following language functions :-
- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Meeting
- Listening and Note taking skills

*(ii) **English Grammar***
A suitable level of proficiency on the following forms of grammar in the Spoken and the Written language is expected from the candidate :-
- Tense and Number
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives & Adverbs
- Determiners
- Prepositions

*(iii)* ***Writing Skills***

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal correspondence skills
- Writing Descriptions/Explanations
- Summary writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

*(iv)* ***Reading Skills***

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு அத்தியாயம் "ஈ")

இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | பொருளியலும் சமூகவியற் கொள்கையும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 08 |
| 2 | அபிவிருத்தி நிருவாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 09 |
| 3 | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 3 மணித்தியாலங்கள் | 10 |
| 4 | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 11 |

13.2.1 பொருளியலும் சமூகவியற் கொள்கைகளும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) :- (பாட இலக்கம் 08).- இலங்கையில் பொருளாதாரச் சமூகக் கொள்கைகளை வடிவமைத்து அதை திரிபுறச் செய்யும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும். இது இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக, அரசியல், வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்தல் தொடர்பானதாக விடயங்களைக் கொண்டமைந்திருக்கும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.2 அபிவிருத்தி நிர்வாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) - (பாட இலக்கம் 09).- இலங்கையின் மீது விசேட கவனம் செலுத்தி பின்வரும் விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள் அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(அ) இலங்கையில் அரசாங்க அமைப்பு
(ஆ) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி
(இ) மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களும்
(ஈ) மக்கள் அமைப்புக்கள்
(உ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.3 முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும்- (பாட இலக்கம் 10).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாத்தாளாகும் :-

(அ) முகாமைத்துவமும் அமைப்புப் பற்றிய கோட்பாடுகளும்
(ஆ) அரச துறையில் எழுகின்ற பிரச்சினைகள் மற்றும் விடயங்களுக்கு இக்கோட்பாடுகளைப் பிரயோகித்தல்
(இ) முகாமைத்துவம் பற்றிய நவீன திறமுறைகளும் செயல்நுட்பங்களும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.2.4 அரச துறையின் நிதி முகாமைத்துவம்- (பாட இலக்கம் 11).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் ஆகும் :

(i) இலங்கையின் நிதிக் கட்டுப்பாடு-
அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய சட்டப்படியான ஏற்பாடுகள்
அரசாங்க நிதி குறித்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு
நிதியம் என்பதன் கருத்து
திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும்
ஒதுக்கீட்டின் நோக்கமும் ஒதுக்கீட்டு முறைகளும்
ஐயத்திற்குரிய நிதியம்
பிற நிதிகளும் அவற்றின் செயற்பாடுகளும்
அரசாங்க வருமானம்
நிதி அமைச்சரின் அதிகாரங்கள், வேலைப்பளு மற்றும் பொதுத் திறைசேரியின் அதிகாரங்கள், வேலைப்பளு
ஆணைச்சீட்டுக்களும் கட்டுநிதிய அதிகாரமும்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு
அரசாங்க செலவினக் குழு
அரசாங்க தொழில் முயற்சிக்குழு

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவம், அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் கடமை பொறுப்புக்கள் என்பனவற்றை இனங்காணுதல்
அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணுதல்
அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல், தரங்கணிப்பிடல் மற்றும் முன்னுரிமை வழங்குதல்
வருடாந்த வருமான மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களை செய்தல், வீரமொங் திட்டத்தைச் செயற்படுத்தல், அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல், மொத்த ஆகுசெலவு மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும், குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் தவிர்வும்

(vii) பல்வேறு கணக்கு அலுவல்கள்

(viii) நிதி முகாமைக்காக வேலைப்பளுவை பொறுப்பளித்தல்

(ix) அரசாங்க நிதிகளின் பொறுப்பும் வங்கிக் கணக்கும் நடைமுறையும்

(x) அரசாங்க விநியோக நடைமுறை.-
பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை பெற்றுக்கொள்ளல், கேள்வி சபைகள் மற்றும் தொழிநுட்ப தரங்கணிப்பு குழுக்களின் அமைவு, நியமன அதிகாரங்களும் வேலைப்பளுவும் கேள்விகளை தரங்கணிக்கும் நடைமுறை, வெளிநாட்டு உதவிகளின் பேரில் செயற்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.3 இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இலங்கை கட்டிக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை.

இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைகள் | 3 மணித்தியாலங்கள் | 12 |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |

13.3.1 நிதி முறைகள்- (பாட இலக்கம் 12).- பின்குறிப்பிடும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள வினாத்தாளாகும் :-

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிக்கோவை-பகுதி 1 (X அத்தியாயம் தவிர்ந்த)
(ii) நடப்பாண்டின் மதிப்பீடுகள். (உதாரணம்) : அவற்றை தயாரித்தல், தலைப்புக்கள், நிதிமுறைகள் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13.3.2 நிர்வாகம்- (பாட இலக்கம் 04).- இப்பாடத்திற்கு ஏற்புடையதான பாடத்திட்டம் 13.1.4 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.4 இரண்டாம் மொழிப்பரீட்சை (உரிய சகல சேவைகளுக்கும்).- சிங்கள மொழிமூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி, தமிழ் மொழி ஆவதுடன் தமிழ் மொழிமூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர் தொடர்பில் இரண்டாம் மொழி சிங்கள மொழி ஆகும். ஆங்கில மொழிமூலம் சேவையில் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்ற அலுவலர்கள் தொடர்பில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழி தொடர்பான பரீட்சைகளில் சித்தியடையதல் வேண்டும்.

இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| இரண்டாவது மொழி பரீட்சை (சிங்களம்) (எழுத்திலான) | 2 மணித்தியாலங்கள் | 13 |
| இரண்டாவது மொழி பரீட்சை (தமிழ்) (எழுத்திலான) | 2 மணித்தியாலங்கள் | 14 |
| இரண்டாவது மொழி பரீட்சை (ஆங்கிலம்) (எழுத்திலான) | 2 மணித்தியாலங்கள் | 15 |

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| இரண்டாவது மொழி பரீட்சை (சிங்களம்) (வாய்மொழி) | 16 |
| இரண்டாவது மொழி பரீட்சை (தமிழ்) (வாய்மொழி) | 17 |
| இரண்டாவது மொழி பரீட்சை (ஆங்கிலம்) (வாய்மொழி) | 18 |

**குறிப்பு**.- இரண்டாவது மொழி பரீட்சையில் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் வாய்மொழிப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

14. இப்பரீட்சை 2011, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி தொடக்கம் 2011, மே மாதம் 15 ஆந் திகதி வரை கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நேரசூசி கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01 | 2011.10.22 | 9.00-12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 02 | 2011.10.22 | 12.30-3.30 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 03 | 2011.10.23 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 2011.10.23 | 12.30-3.30 |
| | | பொருளியல் | 05 | 2011.11.05 | 9.00-12.00 |
| | | சமூகவியல் | 06 | 2011.10.05 | 9.00-12.00 |
| | | ஆங்கிலம் | 07 | 2011.11.05 | 12.30-3.30 |
| 2 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | பொருளியலும் சமூகவியற் கொள்கைகளும் | 08 | 2011.11.12 | 9.00-12.00 |
| | | அபிவிருத்தி நிருவாக நடைமுறை | 09 | 2011.11.12 | 12.30-3.30 |
| | | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 10 | 2011.11.13 | 9.00-12.00 |
| | | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் | 11 | 2011.11.13 | 12.30-3.30 |
| 3 | இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 2011.11.19 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 2011.10.23 | 12.30-3.30 |
| 4 | இலங்கை விஞ்ஞான சேவை யின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 2011.11.19 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 2011.10.23 | 12.30-3.30 |
| 5 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 2011.11.19 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 2011.10.23 | 12.30-3.30 |
| 6 | இரண்டாவது மொழிப்பரீட்சை (உரிய சகல சேவைகளுக்கும்) | சிங்களம் (எழுத்திலான) | 13 | 2011.11.20 | 2.00-4.00 |
| | | தமிழ் (எழுத்திலான) | 14 | 2011.11.20 | 9.00-11.00 |
| | | ஆங்கிலம் (எழுத்திலான) | 15 | 2011.11.20 | 11.30-1.30 |

15. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு ஏற்புடையதான பாடங்களில் இருந்து சித்தியடையும் தேவையை விலக்களித்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலா வது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் இலங்கையின் சட்டமுறைமைகள் குற்றவியற் சட்டமும் சான்றுக் கட்டளைச் சட்டமும் | நியாய துரந்தரர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞர், பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக |
| | பொருளியல்/சமூகவியல் | பொருளியல் அல்லது சமூகவியல் தொடர்பான விசேட பட்டதாரியாதல் வேண்டும். |

16. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் அளிக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2011, யூலை 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சையும் -2011 (II)**

EFFICIENCY BAR EXAMINATION & SECOND LANGUAGE PROFICIENCY TEST FOR OFFICERS IN SRI LANKA ADMINISTRATIVE SERVICE, SRI LANKA ENGINEERING SERVICE, SRI LANKA SCIENTIFIC SERVICE AND SRI LANKA ARCHITECTS' SERVICE - 2011 (II)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) : உதாரணம் : SILVA, A. B.)
1.2 முழுப் பெயர் :
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
1.3 முழுப் பெயர் :
(சிங்களத்தில்/தமிழில்) :----.
2. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
3. 3.1 பால் : பெண் - 1
ஆண் - 0

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.3 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :

[ | | | | | | | | | ]

4. 4.1 உங்களுக்குரிய சேவை :----.
4.2 அச்சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.
5. 5.1 பதவி :----.
5.2 திணைக்களத்தின் பெயர் :----.

6. நீங்கள் விண்ணப்பிக்கும் பரீட்சைகள் மற்றும் தோற்றுகின்ற பாடங்கள் (நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சைகளுக்கு தோற்றுவதாயின் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வெவ்வேறாகக் குறிப்பிடவும்.) :----.

6.1 பரீட்சையின் பெயர் :----. குறியீடு :----.
(பரீட்சை அறிவித்தலில் பந்தி 3 ஐ பார்க்கவும்.)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

6.2 பரீட்சையின் பெயர் :----. குறியீடு :----.
(பரீட்சை அறிவித்தலில் பந்தி 3 ஐ பார்க்கவும்.)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

6.3 பரீட்சையின் பெயர் :----. குறியீடு :----.
(பரீட்சை அறிவித்தலில் பந்தி 3 ஐ பார்க்கவும்.)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

7. இதற்கு முன்னர் நீங்கள் இப்பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தோற்றியுள்ளீர்களா ? :----.

தோற்றியிருப்பின் விடயங்களைக் குறிப்பிடவும் :-

| பரீட்சையின் பெயர் | பாடம் | ஆண்டு | மாதம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றுகின்றீர்களா ? :----.

8.2 முதற்தடவையாக பரீட்சைக்கு தோற்றாவிடின் பரீட்சைக் கட்டணம் தொடர்பாக கீழ்குறிப்பிட்டுள்ள விபரங்களைப் பூர்த்தி செய்யவும் :

செலுத்திய தொகை :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய திகதி :----.
இலங்கை வங்கியின் கிளை :----.

| பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டிவிடவும். |
|---|

**விண்ணப்பதாரியின் கூற்று**

மேற்படி விடயங்கள் சரியானவை எனவும் மேற்காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகைமைகள் உள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இங்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................................................ இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கும் மேற்படி குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகைமைகளைப் பெற்றுள்ளார். பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :----.

8-176

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்**.

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை - 2011

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2011 |
| | | வெள்ளி | 12.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2011 |
| | | வெள்ளி | 19.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2011 |
| | | வெள்ளி | 26.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2011 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2011 |
| | | வெள்ளி | 09.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2011 |
| | | வெள்ளி | 16.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2011 |
| | | வெள்ளி | 23.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2011 |
| | | வெள்ளி | 30.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.09.2011 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2011 |
| | | வெள்ளி | 14.10.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2011 |
| | | வெள்ளி | 21.10.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2011 |
| | | வெள்ளி | 28.10.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.